1984 பிப்ரவரி 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

மதுரையில் இந்தி அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட சிலர் கைதாகியிருப்பது.

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவரவர்களே, இன்றைக்கு விடியற்காலம் ஐந்து மணி அளவில் அடியார் அவர்களும், அவரைச் சேர்ந்த பலரும் மதுரையில் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தற்பொழுது முதலமைச்சரவர்கள் சபையில் இல்லை. அவர் வந்த பிறகு எழுப்பலாம் என்று சொன்னால் அப்பொழுது எழுப்பத் தயார். அல்லது இதுகுறித்து தகவல் ஏதேனும் இருந்தால் அரசாங்கம் அறிவிக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது போன்று தினசரி நடக்கும் காரியங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, அடியார் கைது செய்யப்பட்டார் என்றால் அது சாதாரணமாக அல்ல. ஒரு இரயில்வே நிலையத்தில் இந்தி எழுத்துக்களை அழிக்கப் போகும்பொழுது கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது அரசியல் கட்சி நடத்தும் போராட்டம். அதுகுறித்து அரசாங்கத்திற்குச் செய்தி வந்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவற்றை வரைமுறையோடு கொண்டு வரவேண்டும். கேள்வி நேரம் முடிந்தவுடன் கொண்டு வந்தால் எப்படி பதில் சொல்ல முடியும்? கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கோ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கோ வாய்ப்பா இல்லை? அப்படிக் கொண்டு வரலாம். அவ்வாறு செய்தால் மறுப்பதற்கு ஒன்றுமில்லை.

3. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

இந்தியத் தணிக்கை துறைத் தலைவரின் 1971–72 ஆம் ஆண்டு அறிக்கையின் (சிவில்) மீது பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த இரண்டாம் அறிக்கையில் உள்ள பரிந்துரைகள் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தோறாவது அறிக்கையையும்,

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் 1971–72 முதல் 1976-77 வரையிலான ஆண்டு கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கை மீதான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தி இரண்டாவது அறிக்கையையும் நான் பேரவைக்கு அளிக்கின்றேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தொலைக் காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''தமிழ்நாடு 1984-ஆம் ஆண்டு தொலைக்காட்சியில் வீடியோ கேசட் ரெக்கார்டர்கள் மூலம் (காணொலிச் சுருள் பேழை) திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக் கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்: ''1984 ஆம் ஆண்டு பச்சையப்பன் பொறுப்புக் கழகம் (நிருவாகத்தை எடுத்துக்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, இந்த பச்சையப்பா ட்ரஸ்ட் என்பதிலே 1983–ஆம் ஆண்டு டிசம்பரிலே இருந்து தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டு நிர்வகித்து வருகிறார்கள். அவ்வாறு தனி அதிகாரிகள் நியமிப்பதற்காகச் சொல்லப்பட்ட காரணம் என்னவென்றால் எலெக்ட் ஆன கமிட்டி மெம்பர்களுக்குள் தகராறு என்ற அந்தக் காரணத்தை முன்னிட்டு அதனைக் கலைத்துவிட்டு தனி அதிகாரிகளை நியமித்திருக்கிறீர்கள்.. தகராறு அங்கே மட்டும்தான் வருகின்றதா? இங்கே சட்டச்சபையிலே கூடத்தான் வருகின்றது. அதற்காகச் சட்டசபையைக் கலைத்து விடமுடியுமா? எனவே தகராறு ஒன்றையே காரணம் காட்டி எலக்டட் பாடியினைக் கலைத்தது சரியல்ல. இப்போது மூன்றாண்டு காலமாக அது தனி